உத்தரவுகள் பிறப்பிக்கப்படாமல் உள்ளன. அதனால் கோடிக்கணக்கான ரூபாய் நிலுவையில் உள்ளது. தமிழக அரசு அந்தப் பணத்தை வசூலித்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கும் அதிகாரத்தைத் தொழிலாளர் துறைக்குத் தரவேண்டும். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யும்போது, நேரடியாக நீதிமன்றம் செல்வதற்கு சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். வேலை நீக்கம் மட்டுமல்லாமல், வேறு பிரச்சினைகளிலும் நேரடியாக நீதிமன்றத்தை நாடுவதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை வேண்டும். ஒப்பந்தக் கூலிமுறைச் சட்டப்படி தொழிலாளர் ஆய்வகத் துறை, தானே முன்வந்து தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் புகார் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுப்பது என்ற நிலை இருக்கக் கூடாது. 8-00 மணி நேர வேலையை உத்தரவாதப்படுத்தாத தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களில், தொழிலாளர் துறை தானே தலையிட்டு 8-00 மணி நேர வேலை நேரத்தை உறுதி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகவே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். எந்த இடத்தில் 8-00 மணி நேரத்திற்கு மேல் 12-00 மணி நேரம் வேலை செய்கிறார்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டினால் கண்டிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறபோது, நேரடியாகவே அவர்களைச் சேர்க்க வேண்டும், அதிலே எந்தவிதமான தடைகளும் இருக்கக்கூடாது, அவர்களே ஆய்வு செய்ய வேண்டும், வருவாய்த் துறையின் மூலமாக சான்றிதழ் பெறக்கூடாது என்ற கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், சான்றிதழ் பெற்றால் மட்டும்தான் எந்தெந்தப் பகுதிகளிலே இருந்து வந்து அந்தப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை ஆய்வு

செய்ய முடியும் என்ற முறையிலேதான் அவ்வாறு பின்பற்றப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில்தான் கிராம அளவில் தொடர்பு இருக்கின்றது. வருவாய் கிராம நிருவாக அலுவலர், வட்டாட்சியர், கோட்டாட்சியர் என்ற அதிகாரிகளின் தொடர்புகள் எல்லாம் வருவாய்த் துறைமூலம் தான் இருக்கின்றது. சான்றிதழ் கொடுக்கக்கூடிய அத்தாட்சியைப் பெற்றவர்களும் வருவாய்த் துறையில்தான் இருக்கிறார்கள். வருவாய்த் துறை அதிகாரிகள் சான்றிதழ் கொடுத்தால்தான் அது உண்மையாகவும், நம்பகத் தன்மையுடையதாகவும் இருக்கும். தொடர்பு இல்லாத மற்ற துறைகளிலிருந்து கொடுத்தால் அந்த அளவுக்கு உண்மையானதாக இருக்காது என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8-00 மணி நேர வேலை எங்கே மீறப்படுகிறது என்று குறிப்பாகக் கேட்டார்கள். சென்னை நகரத்தில் இருக்கிற சென்னை சில்க்ஸ், போத்தீஸ் போன்ற எந்த ஜவுளிக் கடைகளிலும் 8-00 மணி நேர வேலை இல்லை. GRT தங்கமாளிகை உட்பட 8-00 மணி நேர வேலை இல்லை. மீனாட்சி மருத்துவமனை என்று காஞ்சிபுரத்தில் இருக்கிறது, அங்கேயும் 8-00 மணி நேர வேலையில்லை. ** நாங்கள் புகார்களாகவே பல மட்டங்களிலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, நம்முடைய அமலாக்கப் பிரிவு இதையெல்லாம் விசாரிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள், வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், அதுசம்பந்தமாக எந்தெந்த இடங்களில் அந்த மாதிரி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.